இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 3 MARCH-2024

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# நீ மண்ணாயிருக்கிறாய்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மார்ச் 2024 மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

## செம்பட்டியில்

# இயேசுவின் பாதத்தில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

**மார்ச் 8**
இரண்டாவது
வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணி முதல்
2.30 மணி வரை



தேவ செய்தியாளர்கள்
சகோதரர். **எல். வின்சென்ட்ராஜ்**
சகோதரி. **கலா வின்சென்ட்ராஜ்**

**மார்ச் 9**
இரண்டாவது
சனிக்கிழமை
காலை 9.30 மணி முதல்
2.30 மணி வரை

**இடம் : வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்**

மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்

## மதுரையில் எழுப்புதல்

# உபவாச ஜெபம்



தேவ செய்தியாளர்கள்
சகோதரர். **L. வின்சென்ட்ராஜ்**
சகோதரி. **கலா வின்சென்ட்ராஜ்**

**மார்ச் 16**
மூன்றாவது
சனிக்கிழமை
காலை 9.30 மணி
முதல்
2.30 மணி வரை

இடம் : இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், **PRC Depot** அருகில், மதுரை.

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் நல்லவரும் கிருபை நிறைந்தவருமாயிருக்கிறார். **ஏசாயா 11:9 சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்** என்ற வார்த்தையின்படி இந்த பூமியிலே வாழ்கின்ற ஜனங்கள் தேவனை அறிகிற அறிவில் நிறைந்திருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு தேவவல்லமை இந்த பூமியிலே ஜனங்களை நிரப்ப வேண்டும். கடந்த நாட்களில் பிப்ரவரி 1,2,3-ஆகிய தேதிகளில் திருப்பத்தூரில் நடைபெற்ற உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். கர்த்தர் வந்த எல்லா ஜனங்களையும் பெலப்படுத்தி ஆசீர்வதித்தார். மட்டுமல்ல எல்லா தேவ ஊழியர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார், இதற்காக ஜெபித்த உங்களுக்கு நன்றி. வருகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்காக நாம் கருத்தாய் ஜெபிக்க வேண்டும். கருத்துக்கணிப்பு என்ற செய்தியிலே அதே நிலைதான் நீடிக்கும் என்று ஜனங்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள், தேவனே ஜெயம் எடுக்க வேண்டும். கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும், கோரேசின் ஆவியை ஏவி எழுப்பினவர் சுவிசேஷத்திற்கு சாதகமான ராஜ்யம் ஏற்படவும் கருத்தாய் போராடி ஜெபிக்க வேண்டும். கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற ஏப்ரல் மாதம் 9 முதல் 12 வரை செம்பட்டியில் சுவிசேஷ பயிற்சிப் பள்ளி நடத்த இருக்கிறோம். இதிலே சகோதரர். G.P.S. ராபின்சன் அவர்களும், கர்த்தருடைய தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்களும், சகோதரர். T. ஸ்டீபன் அவர்களும் பயிற்சி கொடுக்க இருக்கிறார்கள். இதன் மூலமாக தொய்ந்து போன சுவிசேஷ ஊழியம் புத்துணர்ச்சியடையவும், எழுப்புதலின் ஊழியத்தை ஜனங்கள் செய்யவும் இந்த ஊழியத்திற்காகக் கருத்தாய் ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுடைய கிருபையால் மீடியா ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9 மணி முதல் 9.45 வரை நடைபெறும் **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** நிகழ்ச்சியும், காலைதோறும் 5 மணிக்கு **இயேசுவை தினம் பார்ப்போம்** நிகழ்ச்சியும் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்க தேவன் கிருபை செய்கிறார் இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். இன்னும் மீடியா துறையில் வேலை செய்ய ஏற்ற ஆட்கள் கிடைக்கவும், வானத்தின் வாசல் ஊழியங்களுக்காகவும், மதுரை எழுப்புதல் உபவாச ஜெப ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். இந்த ஊழியத்தை உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையினாலும் தாங்க மறவாதிருங்கள். ஆண்டவராகிய தேவன் நம்மை ஆசீர்வதித்து நடத்துவார்.



இயேசுவின் பணியில்,

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# நீ மண்ணாயிருக்கிறாய்

சகோ. L. வின்சென்ட்ராஜ்

**நீ மண்ணாயிருக்கிறாய்** ஆதி 3:19.

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு நாம் வாழும் இந்த விஞ்ஞான உலகில் மனிதன் கொடி கட்டி பறக்கிறான். சந்திர மண்டலத்திற்கு போனேன், வான மண்டலத்திற்குப் போனேன் நான் செய்யாத காரியம் இல்லை, நாங்கள் கண்டுபிடிக்காத காரியம் இல்லை, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்கிறார்கள். நாங்கள் பூமியின் எல்லையைக் காட்டிலும் உயர்ந்தவர்கள். நாங்கள் அசுர வேகத்தில் வளருகிறவர்கள். எங்களை மேற்கொள்ள ஒருவனும் இல்லை என்று தலைக்கு மேல் ஆணவத்தில் கொடிகட்டிப் பறக்கிற இந்த உலகத்தில், கடந்த சில வருஷங்களாக உலகம் முழுவதும் ஏற்பட்ட கொடிய கொள்ளை நோய்கள், நிலநடுக்கங்கள், புயல், வெள்ளசேதங்கள் முழு உலகத்தையும், மனிதனுடைய அறிவுக்கும், அகந்தைக்கும் ஒரு பெரிய முற்றுப் புள்ளியை வைத்தது. குதிரைக்கு மூக்கணாங் கயிறு போட்டது போல தேவன், மனிதனுடைய அறிவுக்கும், அகந்தைக்கும் மூக்கணாங்கயிறு போட்டு அறிவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவரும், மனிதன் எங்கிருந்து தோன்றினான், எங்கிருந்து வந்தான் என்பதை அறிந்து கொண்டால், சற்று ஆட்டம், பாட்டம் எல்லாம் குறைந்து தன்னைப் படைத்த, உண்டாக்கின தேவனுக்கு முன்பாக பயபக்தியாக இருப்பான் என்பதை நம்புகிறேன்.

தேவன் மனிதனைப் படைப்பதற்கு முன்பாக, சிருஷ்டிப்பதற்கு முன்பாக தூதர்கள் உலகமாயிருந்தது. அதிலே மூன்று முக்கியமான தூதர்கள் இருந்தார்கள். மிகாவேல், காபிரியேல், லூசிபர் என்று மூன்று பேர். லூசிபர் என்ற தூதனை, தேவனை ஆராதிக்கவும், தேவனை மகிமைப்படுத்தவும் ஏற்படுத்தி வைத்திருந்தார். மற்ற இரண்டு தூதர்களும் தேவன் தங்களுக்கு கட்டளையிட்ட யாவற்றையும் சரியாய் செய்து கொண்டிருந்தார்கள். அதாவது தேவன் கொடுத்த வேலையை கவனமாய் நேர்த்தியாய் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் லூசிபர் என்ற தூதன் மட்டும் அகந்தை, பெருமை அடைந்து தேவனுக்கு விரோதமாய் பெருமை கொண்டு தனக்கு என்று, தன்னைத் தொழ, ஆராதிக்க ஒரு கூட்டத்தை, தூதர்களை தன் பக்கமாய் திருப்பினான் என்று வேதம் சொல்லுகிறது. **எசேக்கியேல் 28-ஆம் அதிகாரத்தில் 14 முதல் 17 வரை நீ, காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணுப்பட்ட கேருப். தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய், நீ, சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டு பிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய். உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்தது. நீ, பாவஞ் செய்தாய், ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன் என்றார்.** வான மண்டலத்தில் இருந்த அந்த கேருப் தூதனை தேவன் பூமியின் மண்ணிலே தள்ளிவிட்டார். அது தேவனுடைய தண்டனை, சாபமாக இருந்தது.

இயேசு சொன்னார் **லூக்கா 10:18-ல் சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்றார்.** அவன் சபிக்கப்பட்டு கீழே விழுந்து அக்கினி கடலிலே, மண்ணிலே தள்ளப்பட்டான். அந்த மண் அவன் நிமித்தம் சபிக்கப்பட்டிருந்தது. **2 பேதுரு 2:4-ல் பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே**

**கட்டி நரகத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது.** இப்படி லூசிபர் தூதன் பாவம் செய்து தள்ளப்பட்ட போது, அவன் இருந்த இடத்தில் அவன் காரியத்தை செய்ய, தேவனை துதிக்க, ஆராதிக்க அந்த வாய்ப்பை தேவன் மனிதர்களுக்குக் கொடுத்தார். **ஏசாயா 43:21-ல் இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன், இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்றார்.** இப்படி துதிக்கவும், தேவனைக் கனம் பண்ணவும் களிமண்ணினாலே, பிசைந்த மண்ணினாலே மனிதனை உண்டாக்கி, அப்படி பிசைந்த களிமண்ணிலே தம்முடைய சுவாசக் காற்றை ஊதினார். உயிர் மூச்சை அவன் மேல் ஊதினார். அப்பொழுது மனிதன் உயிருள்ளவனாக மாறினான். **ஆதி 2:7-சொல்லுகிறது தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.** நாம் மண்ணிலிருந்து வந்தவர்கள், மண்ணுக்கே திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய நியமம்.

இந்த மண்ணான சரீரத்திலே தேவனுடைய சுவாசத்தை, உயிர் மூச்சை நாம் பெற்றிருக்கிறோம். அந்த மூச்சை, அந்த சுவாசத்தை தேவன் திரும்ப வாங்கிக் கொண்டால் அவைகள் மண்ணுக்கு திரும்பும். **சங் 104:29-ல் நீர், உமது முகத்தை மறைக்க, திகைக்கும், நீர், அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, மண்ணுக்குத் திரும்பும் என்று சொல்லப்பட்டுள்ளது.** ஆகவே இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதரனே, சகோதரியே என்னதான் நாம் படித்திருந்தாலும், வசதி வாய்ப்புகள் இருந்தாலும், விஞ்ஞானத்தில் வாழ்ந்திருந்தாலும், கை நிறைய சம்பாதித்தாலும் வீண் பெருமையாய், அகந்தையாய் மற்றவர்களைப் புறக்கணித்து, அற்பமாய்த் தள்ளிவிட்டு, நான் மேலானவன் என்னைப் போல யார்? உண்டு என்று சொல்லாமல், நாம் மண்ணிலிருந்து வந்தவர்கள், மண்ணுக்கே போகிறவர்கள் என்பதை மறந்து போகாமல் தேவனுக்குப் பயந்து அவரை தொழுது, அவருடைய சாயலான மனிதர்களை நேசிக்கவும், மதிக்கவும், அன்பு செலுத்தவும், உதவி செய்யவும் வாழப்பழகிக் கொள்ளுவோம். **சங் 103:14 சொல்லுகிறது நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்.** நம்முடைய ஆட்டம், பாட்டம் எல்லாம் மனிதர்களிடத்தில் தான் எடுபடும். இவர் பெரியவர், உயர்ந்தவர், சிறந்தவர், சூப்பரானவர் என்று. ஆனால் தேவனிடத்தில் எடுபடாது. ஏனென்றால் அவர் நம்மை சிருஷ்டித்தவர். களிமண்ணினாலே பிசைந்தவர். அவருடைய சுவாசத்தை, உயிர் மூச்சை நமக்கு இரவலாக கொடுத்திருக்கிறார்.

நாம் மண்ணென்று அவர் நினைவு கூருகிறார். அவருக்கு முன்பாக நாம் அடக்கத்தோடும் ஒடுக்கத்தோடும், அவரைப் பணிந்து, அவர் நம்மை பூமியில் ஏற்படுத்திய நோக்கத்தை உணர்ந்து, அறிந்து அவரை பயத்துடனே சேவிக்கக்கடவோம். இதை யோபு என்ற பக்தர் கண்டுபிடித்தார். **யோபு 10:9-ல் களிமண்போல என்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப் போகப்பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும் என்று,** தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி பணிந்து கொண்டு, அத்தனை பாடுகள், உபத்திரவங்களிலிருந்தும் வெளியே வந்தார். மட்டுமல்ல **யோபு 28:2-ல் இரும்பு மண்ணிலிருந்து எடுக்கப்படுகிறது போல, செம்பு கற்களிலிருந்து உருக்கி எடுக்கப்படும்.** இந்த மண்ணுக்குள் தான் செம்பு இருக்கிறது, பொன் இருக்கிறது, விலையேறப் பெற்ற பொக்கிஷம் இருக்கிறது. பொட்டாசியம், இரும்பு, இன்னும் நிறைய தாதுப்பொருட்கள் எல்லாம் மண்ணிலிருந்து தான் வருகிறது. ஆகவே தான் இதை உணர்ந்து அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் **2 கொரி 4:7-ல் இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக் கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என்றார்.** நாம் மண்ணான சரீரத்தில் தேவனுடைய இரக்கத்தை, பாவ மன்னிப்பை பெற்றபடியால் விலையேறப்பெற்ற ஞானம், கிருபை, தேவனுடைய தயவு, இரக்கம், அபிஷேகம், ஊழியம் இவைகளைப் பெற்றிருக்கிறோம்.

நீங்கள் உயர்ந்தவர்கள், படித்தவர்கள், பரிசுத்தவான்கள், பக்தியுள்ளவர்கள், சிறந்தவர்கள் என்பதற்காக அல்ல, இது

உங்களால் உண்டானதும் அல்ல தேவனுடைய ஈவு, தயவு. ஆகவே இந்த மண்பாண்டங்களில் தேவனுடைய பொக்கிஷங்களை பெற்றிருக்கிறோம். **2 கொரி 3:5-ல் எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு, நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல, எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது** என்றார். ஆகவே தான் தேவன் மனிதனைப் பார்த்து மனிதனே, நீ, மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்றார். போகட்டும் இந்த மண்ணிலிருந்து நாம் என்ன செய்வது?, எப்படி தேவனைப் பின்பற்றுவது?, பரலோகத்திற்குப் போவது? இந்த மண்ணினால் என்ன நன்மை என்பதைப் பார்ப்போம்.

## நாம் விதைப்பதற்கு மண் தேவை

**சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது. அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. மாற்கு 4:5,6.** தேவனாகிய கர்த்தர் களிமண்ணினாலே மனிதனை சிருஷ்டித்து, அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். தன்னோடு இருக்கவும், தன்னுடைய ஜனம் களிப்பாய் இருக்கவும் சிங்காரத் தோட்டத்தில் வைத்திருந்தார். ஆனால் பிசாசு கோபவெறி கொண்டு தான் பூமியிலே தள்ளப்பட்டதையும், தன்னுடைய மேன்மையிலே மனிதன் இருப்பதையும் கண்ட அவன் எரிச்சலடைந்து, எப்படியாவது தேவனிடத்திலிருந்து மனிதனைப் பிரிக்க வேண்டும். அவர்கள் தேவனை விட்டுப்பிரிகிற, விலகுகிற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று பார்த்துக் கொண்டே இருந்தான். அதினாலே ஏவாளோடே பேசி இந்த பழத்தை புசிக்கும் நாளில் நீங்கள் தேவர்களைப் போல இருப்பீர்கள் என்று ஏமாற்றியது. ஆதி 3:5-ல் சொல்லப்பட்டபடி வஞ்சித்து, ஏமாற்றி தேவ கோபத்திற்குள்ளாக்கி விட்டான். அதன் விளைவாக அவர்கள் தேவனுடைய மகிமையை இழந்து, தேவனுடைய வல்லமை, அதிகாரத்தை இழந்து, தேவ சமூகத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். தேவனுக்கு அருகில் இருந்தவர்கள், இப்பொழுது தூரமானார்கள், தேவ சமூகத்தை இழந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

அப்பொழுது தான் ஆண்டவர் அவர்களுக்கு தண்டனை கொடுத்து, பிசாசைப் போல் பூமியில் தள்ளாமல் **ஆதி 3:23-ல் நீ, எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாயோ அதே, மண்ணுக்குத் திரும்பிப் போ, அது மட்டுமல்ல, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்தவும், சீர்படுத்தவும், செப்பனிடவும் தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.** பிசாசைப் போல மனிதனை சபித்து, பாதாளத்திற்குள் தள்ளாமல் அந்த தோட்டத்தை பண்படுத்தவும், சரி செய்யவும், கொத்தி எருப்போடவும், தண்ணீர் பாய்ச்சவும் வைத்தார். பரலோக ராஜ்யத்திற்கு நீ வருவதற்கு, இந்த பூமியில் நீ பாடுபட்டு மரித்து, என் கிரியைகளை செய்து, அடிபட்டு திருந்தி, என்னுடைய பரலோக மேன்மையை தெரிந்து கொண்டு வா. என் அருமை, என் மேன்மை உனக்கு தெரியவும் இல்லை, புரியவும் இல்லை என்று ஏதேன் தோட்டத்திலிருந்து, தேவ சமூகத்திலிருந்து பூமிக்கு அனுப்பிவிட்டார். அதன் பிறகு தான் அந்த தோட்டத்தை, பரலோகத்தை, மேன்மையான இடத்தை சுடரொளி ஏந்திய கேரூபீன்களை வைத்து பாதுகாத்தார். ஒருவரும் போக முடியாதபடி ஜீவ விருட்சத்திற்கு போகும் வழியை அடைத்தார்.

அந்த வழியைத் திறக்கவும், நாம் மீண்டும் தேவனோடு இணைக்கப்படவும் தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து நானே வழி, பரலோகம் போக என்னையன்றி வேறு வழியில்லை. நானே சத்தியம், நானே ஜீவன் என்று சொல்லி நமக்காக சிலுவை பாடுகளை ஏற்றுக் கொண்டு கெத்சமனே தோட்டத்தில் பலத்த சத்தத்தோடு ஜெபித்தார். **யோபு 16:18-ல் பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே, என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக என்று கதறினார்.** அப்பொழுது அவருடைய வியர்வை இரத்தத் துளிகளாக பூமியிலே, மண்ணிலே விழுந்தது. **லூக்கா 22:44-ல் அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார், அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.** அதுவரை பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், அது உனக்கு முள்ளுகளையும், குருக்கையும் முளைப்பிக்கும் என்ற அந்த சாபத்தை மாற்றி, இனி விதைப்பும், அறுப்பும் ஒழிந்து போவதில்லை என்று நம்முடைய நிலத்தை, நம்முடைய கல்லான இருதயத்தை, நம்முடைய குடும்பத்தை

பண்படுத்த ஆரம்பித்தார். இன்றைக்கு அவருடைய வித்து, கெத்சமனே தோட்டத்தில் அவர் சிந்திய இரத்தத்தின் பலன், அந்த மண்ணின் ஆசீர்வாதம், நம்மேல் இறங்கி இருக்கிறது. நம்முடைய உள்ளத்தை, தரிசு நிலத்தை, முட்பூண்டுகளை மாற்றி இருக்கிறது. **எபிரே 6:7,8-ல் எப்படியெனில் தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும், முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும், சபிக்கப்படுகிறதற் கேற்றதாயுமிருக்கிறது. சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு என்று சொல்லப்பட்டுள்ளது.**

தரிசு நிலமாக, தண்ணீர் நிலமாக இருந்த மனிதனுடைய இருதயத்தை மண் உள்ளதாக, விதை விழுந்தால் முளைக்கிறதற்கான விளைச்சல் நிலமாக மாற்றினார். **ஓசியா 10:12-ல் நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள். கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமா யிருக்கிறது என்றார்.** இன்றைக்கு தரிசு நிலத்தை, முள்ளுள்ள இந்த பாறை இடத்தை, அவர் சிந்திய இரத்தத்தினால் மண் உள்ள, உரமுள்ள, ஆரோக்கியமுள்ள விளைச்சலைக் கொடுக்கவும், சில விதைகள் மண்ணில் விழுந்தது, நல்ல நிலத்தில் விழுந்து, ஒன்று முப்பதும், அறுபதும், நூறு மடங்காகவும் பலன் கொடுத்தது போல தேவன் மாற்றுவார், இந்த தோட்டத்தைப் பண்படுத்தவும், பூமியிலே தங்களை சரிசெய்து கொண்டு மனம் திரும்பி, இரட்சிப்பை அடையவும், அதே மண்ணைப் பண்படுத்தவும், விளைச்சல் கொடுக்வும் தேவனுக்கு மகிமையாக வாழ்ந்து பரலோகம் போகவும் தேவன் இந்த பூமியிலே நம்மை அனுப்பினார்.

ஆகவே இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதரனே, சகோதரியே, நான் மண்ணு தானே இனி எனக்கு என்ன இருக்கு என்று, ஏனோ தானோ என்று வாழ்ந்து விடாமல், அவருக்கு மகிமையாக ஜீவிக்கவும், நீ, மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்ற வார்த்தையின்படி இந்த மண்ணிலே, இந்த பூமியிலே தேவனுக்காக பொன்னாக வாழ்ந்து, தங்கமாக வாழ்ந்து, விலையேறப்பெற்ற பாத்திரமாக, கனத்திற்குரிய பாத்திரமாக ஜீவித்து,அவர் சரி செய்த மண்ணாக, தேவன் பயன்படுத்தும் மண்ணாக மாறுங்கள். இதற்குத்தான் நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்றார். நம்மை இந்த பூமியிலே விலையேறப்பெற்ற பாத்திரங்களாக மாற்றியிருக்கிறார். வேதம் சொல்லுகிறது **2 தீமோத் 2:20-ல் ஒரு பெரிய வீட்டிலே பொன்னும், வெள்ளியுமான பாத்திரங் களுமல்லாமல், மரமும், மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும், சில கனவீனத்திற்குமானவைகள் என்றார்.** நாம் கனவீனமாய் போகாதபடிக்கு கனத்திற்குரிய, எஜமானுக்கு உபயோகமான பாத்திரமாய் மாற வேண்டும். நம்மை தாழ்த்தி, **ஏசாயா 64:8 சொல்லுகிறது போல இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண். நீர் எங்களை உருவாக்குகிறவர்** என்ற வார்த்தையின்படி இந்த களிமண்ணாகிய நம்மை அவருக்குப் பிரயோஜனமாக மாற்றி மகிமையடைவாராக. அதற்குத்தான் இந்த மண்ணை இந்த பூமியிலே உயிரோடே வைத்திருக்கிறார்.

## மண்ணினாலே பலிபீடம்

**மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின் மேல் உன் ஆடுகளையும், உன் மாடுகளையும் சர்வாங்க தகன பலியாகவும், சமாதான பலியாகவும் செலுத்துவாயாக. நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்றார். யாத் 20:24.** இந்த மண்ணினாலே சிருஷ்டிக்கப்பட்ட, உண்டாக்கப்பட்ட மனிதன், தேவனுக்கு மண்ணினாலே ஒரு பலிபீடத்தைக் கட்ட வேண்டும். பொன்னினாலோ, தங்கத்தினாலோ, சில்வரினாலோ, மரத்தினாலோ, சித்திர வேலையினாலோ கட்டாமல், கற்கள் பளிங்குகளினால் கட்டாமல் மண்ணினாலே அதாவது உடைகிறதாக, நொறுங்குகிறதாக இருக்க வேண்டும் என்றார். அப்படி என்றால் நம்முடைய உடல் தான், சரீரம் தான் மண். இந்த மண்ணிலிருந்து உடைத்து, உருவாக்கப்பட்ட குணத்திலிருந்து, சுபாவத்திலிருந்து தேவனுக்கு ஒரு பலிபீடம் கட்ட வேண்டும். அது பணத்தினாலோ, பளிங்குனாலோ அல்ல, நாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டு அதினால் உண்டாகிற மாற்றம், சுபாவம், குணங்கள், தேவனுடைய கிரியைகளால்

அவருக்கு பலிபீடம் கட்ட வேண்டும். அதை கட்டுகிறவர் தேவன்.

இதைத்தான் **ரோமர் 9:21-ல், எரே 18:4,6 வசனத்தில் தேவன் சொல்லுகிறார். மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒன்றை கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின் மேல் அவருக்கு அதிகாரம் இல்லையோ? என்று தேவன் கேட்கிறார்.** நாம் மிதிக்கப்பட்ட களிமண்ணாக, தேவன் எது சொன்னாலும் செய்கிற சுபாவம் நிறைந்தவர்களாக வாழ்கிற, வனைகிற பாத்திரமாக, அவர் திருப்புகிற பக்கமெல்லாம் செல்லுகிற பாத்திரமாக இருக்க வேண்டும். இதற்காகத்தான் மண்ணினாலே ஒரு பலிபீடத்தை கட்டுங்கள் என்றார். இந்த மண்ணாகிய மனிதனுடைய இருதயத்திலிருந்து வருகிற துதி ஸ்தோத்திர ஜெபங்கள் தான் விலையேறப்பெற்ற பலிகள். இதைதான் **சங் 51:17-ல் தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்** என்று தாவீது ராஜா இருதயம் நொறுங்கி, உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, தேவனால் வனைக்கப்பட்டு, சமாதானப் பலிகளை, ஒப்புரவாகுதலின் பலிகளை, மன்னிப்பின் பலியை, இரக்கத்தின் பலியை செலுத்துகிறார். இந்த மண்ணான மனிதனுடைய ஆத்துமாவிலே, தேவனுடைய சுபாவத்தினாலே உண்டாகிற பலி தான் உயிருள்ள பலி. தேவன் ஏற்றுக்கொள்ளும் பலி. இப்படிப்பட்ட பலிகளைச் செலுத்தத்தான் நாம் பூமியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம்.

ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் **ரோமர் 12:1-ல் சொல்லுகிறார் நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன் என்றார்.** நம்முடைய சரீரத்திலிருந்து, மண்ணிலிருந்து உண்டாகிற பலியே தேவனுக்கு ஏற்புடைய பலி. இதைத்தான் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். வெறும் சிடி, டிவி-யில் பாடல்களைக் கேட்டால் போதாது. உன் வாயைத் திறந்து தேவனைத் துதிக்க, ஸ்தோத்தரிக்க வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து வருகிற ஜெபமாக இருக்க வேண்டும். இன்றைக்கு இதை செய்ய முடியாமல், பலிபீடம் உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, ஜனங்கள் தேவனை மறந்து, இருமனமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட தேசத்தையும், ஜனங்களையும் தேவன் பக்கம் திருப்பத்தான், எலியா என்ற தேவ மனிதன் வானத்திலிருந்து அக்கினியை இறங்கி வரப்பண்ணினான். அக்கினியினாலே உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றார். வணங்கா கழுத்துள்ளவர்கள், முரட்டுத்தனமானவர்கள், தேவனை மறந்தவர்கள், பாகாலைப் பின்பற்றினவர்கள் எல்லாரையும் கூடி வரச்செய்து உடைந்த பலிபீடத்தை, மறந்த பலிபீடத்தை சரி பண்ணினான். **1 இராஜா 18:30-33 அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி என் கிட்டே வாருங்கள் என்றான். சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்தபோது தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு, உனக்கு இஸ்ரவேல் என்னும் பெயர் இருப்பதாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின் படியே பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடி விதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கினான்.**

உடைந்து போன, இஸ்ரவேலர் நொறுக்கிப் போட்ட, மறந்த பலிபீடத்தை சரி செய்து, மனம் திரும்பி பொல்லாத துர்க்குணத்தை விட்டுவிட்ட மக்களை தேவன் பக்கமாக திரும்பினான். இது தான் மண்ணினால் உண்டாக்கப்பட்ட பலிபீடம். இந்த பலிபீடம் சரி செய்யப்பட்ட போது தேவன் இறங்கி அக்கினியை அனுப்பி, ஜனங்களின் மேல் சுட்டெரிப்பின் ஆவியை ஊற்றினார். உடைந்த பலிபீடங்களை சரிசெய்து, சர்வாங்க தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தி ஜனங்களை தேவனோடு இணைத்தான். மண்ணைப் பொன்னாக மாற்றினான். இந்த செய்தியை வாசிக்கிற என் அன்பு சகோதரனே, சகோதரியே இன்றைக்கு இந்த பூமியிலே உயிரோடிருக்கும் நாம் எல்லாரும் கர்த்தரை நேசித்து, அவரை பின்பற்றி, அவருக்கு உகந்த பாத்திரமாக மாறி, திரும்ப அந்த மண்ணுக்குப் போவதற்குள் கர்த்தருக்காக என்னென்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்யுங்கள். அப்பொழுது தேவன் உங்கள் மேல் பிரியமாயிருப்பார். உங்கள் பலிகளை ஏற்றுக் கொள்வார். இந்த மண்ணுக்குள் ஒரு பொக்கிஷத்தை வைத்து,உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. கிருபையானது உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

# என் உண்மையும், என் கிருபையும் அவனோடிருக்கும்



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு என் வாழ்த்துக்கள்.

நாம் வாழுகின்ற இந்த கடைசி நாட்களில் உண்மையுள்ளவர்கள் என்று சொல்கிற நபர்களை நாம் பார்ப்பது அரிதானதாயிருக்கிறது. எந்த வேலையிலும் உண்மையை நாம் பார்க்க முடியவில்லை. பண விஷயத்திலும் உண்மையற்று இருக்கிறார்கள், பேச்சில் உண்மையில்லை. **சங் 12:1-ல் இரட்சியும் கர்த்தாவே! பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான், உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்** என்று சங்கீதக்காரன் சொல்வது போல, உண்மையுள்ளவர்கள் மனிதரில் குறைந்து கொண்டேயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உலகில் வாழ்கின்ற நாம் உண்மையுள்ளவர்களாக வாழ்வதற்கு ஆண்டவர் சொல்கிறார் **சங் 89:24-ல் என் உண்மையும், என் கிருபையும் அவனோடிருக்கும்** என்கிறார், எத்தனை பெரிய பாக்கியம். தாவீதுக்கு ஆண்டவர் கொடுத்த கிருபை இது. இந்த சங்கீதத்தில் உண்மை என்ற வார்த்தை பலமுறை வருகிறது. **சங் 89:1,2-ல் கர்த்தருடைய உண்மையைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என் வாயினால் அறிவிப்பேன்......, உமது உண்மையை வானங்களில் ஸ்தாபிப்பீர்.** வசனம் 8-ல் **சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே! உம்மைப் போல வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது.** வசனம் 49-ல் **ஆண்டவரே, நீர் தாவீதுக்கு உம்முடைய உண்மையைக் கொண்டு சத்தியம் பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே?** என்று ஆண்டவரின் உண்மையை சங்கீதக்காரன் சொல்லுகிறான். அந்த உண்மையை ஆண்டவர் நமக்கும் தருகிறார் அல்லேலூயா! என் உண்மை உன்னோடிருக்கும் என்கிறார். என் உண்மை உன்னோடிருக்கும் என்று சொன்னவர் யார்? அவர் எப்படிப்பட்டவர், யாரெல்லாம் உண்மையாய் இருந்தார்கள், நாம் எப்படி இருக்க வேண்டும் என்று பார்ப்போம்.

## நம் தேவன் யார்?

என் உண்மை உன்னோடிருக்கும் என்று சொன்னவர் நிச்சயம் உண்மை நிறைந்தவராய் இருக்க வேண்டும். **எபி 3:6-ல் கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்** என்று வாசிக்கிறோம். **1 தெச 5:24-ல் உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்** என்றும், **1 கொரி 1:9-ல் தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்** என்றும் பவுல் சொல்கிறார். உண்மையுள்ள தேவன் நம்மை அழைக்கிறார். கிறிஸ்துவோடு நாம் ஐக்கியமாயிருப்பதற்காகவே அழைக்கிறார் என்று சொல்கிறார். நாம் எப்படி ஐக்கியமாக முடியும்? நமக்கு என்ன தகுதி இருக்கிறது. எல்லாரும் பாவம் செய்து ஏகமாய் கெட்டுப் போனவர்கள். இளையமகன், ஊதாரிமகனைப் போல தகப்பனை விட்டுப் பிரிந்து, ஆசீர்வாதம் மட்டும் வேண்டும், உம்மோடு நான் தங்கிப் பேசி, உறவாட எனக்கு நேரமில்லை.எனக்கு வேலை இருக்கு, நண்பர்கள் இருக்கிறார்கள், உலகம், நாகரீகம், சிற்றின்பங்கள் உண்டு. அதற்கே

நேரம் போதவில்லை, நான் எங்கே தகப்பனோடு உறவாட, பேச, ஐக்கியமாயிருப்பது என்று ஓடுகிறவர்களாயிருக்கிறோம். ஆனால் இளையமகன் புத்தி தெளிந்து தகப்பன் வீட்டிற்கு வந்து, தன்னைத் தாழ்த்தி மன்னிப்பு கேட்டது போல, நாம் நடந்து கொண்டவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு உண்மையாய் வருந்தினால் தகப்பன் இயேசு தாம் கல்வாரி சிலுவையில் நமக்காக, நம் பாவங்களுக்காக மரித்ததை, இரத்தம் சிந்தினதை நினைத்தருளி, அவருடைய இரத்தத்தினால் நம் பாவமற நம்மைக் கழுவி, தம்மோடு சேர்த்து, அணைத்துக் கொள்ளுவார். அப்போது நாம் அவரோடு இணைக்கப்பட்டு, அவரோடு ஐக்கியமாகி விடுவோம் நாம் எவ்வளவு தூரம் போயிருந்தாலும், நாம் மனம் திரும்பும் போது, பாவத்திற்காக வருந்தும் போது நம்மை அவரோடு இணைத்திடுவார் ஆமென்!, அவர் உண்மையுள்ளவர்! அவரோடு ஐக்கியமாயிருக்க நம்மை அன்போடு அழைக்கிறார்.

அதுமட்டுமல்ல **2 தெச 3:3 கர்த்தரோ உண்மையுள்ளவர்,அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்றுவிலக்கிக் காத்துக் கொள்ளுவார்.** நம்முடைய வாழ்க்கையில் திடீரென்று எதிர்பாராத நேரங்களில் பல தீமையான காரியங்கள் நமக்கு நேரிடும் போது, நாம் மனம் தளர்ந்து விடுகிறோம், என்ன செய்வேன்! எப்படி இதிலிருந்து வெளியே வருவேன்! யார் என்னைக் காப்பாற்றுவார்! யார் எனக்கு உதவி செய்வார் என்று புலம்புகிறோம். நம் கர்த்தர் உண்மையுள்ளவர், இப்பொழுது நீங்கள் கடந்து போகிற இந்த துயரப்பாதையிலிருந்து உங்களை விடுவித்து, இந்த தீமையிலிருந்து உங்களை விலக்கி காத்துக் கொள்ளுவார். விசுவாசியுங்கள்! அவர் உண்மையுள்ளவர். **1 கொரி 10:13 மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.** நம்முடைய திராணிக்கு மேலாக நம்மால் தாங்க முடியாத சோதனையை அவர் நமக்கு தருவதில்லை. எந்த சோதனையானாலும் தாங்க நமக்குப் பெலன் கொடுத்து, அதிலிருந்து தப்பிப் போக வழியை அவர் காட்டுவார். அவர் உண்மையுள்ளவர் எந்த தீமையையும் நம்மை விட்டு விலக்கிக் காத்துக் கொள்வார்.

இன்னும் **எபி 10:23-பின்பகுதியில் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.** ஆபிரகாமுக்கு குழந்தையை தருவேன் என்று வாக்குப் பண்ணினார். அவர் உண்மையுள்ளவரா யிருந்தார், ஈசாக்கை கொடுத்தார். மனிதர்கள் இன்று வாக்குறுதிகள் கொடுப்பார்கள் மாறி விடுவார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை என்று மறுத்து விடுவார்கள். ஆனால் தேவன் உண்மையுள்ளவர். வாக்குத்தத்தம் பண்ணினதைக் கட்டாயம் நிறைவேற்றுவார். 2 தீமோத் 2:13-ல் நாம் உண்மை யில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார். நாம் கூட உண்மையில்லாதவர்களாய் இருந்தாலும் அவர் உண்மையுள்ளவர், சொன்ன வாக்குத்தத்தம் அனைத்தையும் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். நான் அப்படிச் சொல்லவில்லை என்று மறுக்கமாட்டார், மாற்றமாட்டார். சொன்னதைச் செய்யுமளவும் நம்மை கைவிடவேமாட்டார் அவர் உண்மையுள்ளவர்.

## முற்பிதாக்களின் உண்மை

ஆபிரகாமைக் குறித்து நெகேமியாவின் புஸ்தகத்தில் நாம் வாசிக்கிறோம். **நெகே 9:7,8-ல் ஆபிராமைத் தெரிந்து கொண்டு, அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி,அவனுக்கு ஆபிரகாம் என்று பேரிட்ட தேவனாகிய கர்த்தர் நீர். அவன் இருதயத்தை உமக்கு முன்பாக**

**உண்மையுள்ளதாகக் கண்டீர்....., புறஜாதிகளுடைய தேசத்தை அவன் சந்ததிக்கு கொடுக்கும்படி அவனோடு உடன்படிக்கைப்பண்ணி உம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினீர், நீர் நீதியுள்ளவர்** என்று நெகேமியாவின் ஜெபத்தில் ஆபிரகாமின் இருதயம் உண்மையுள்ளது என்று சொல்கிறார். நம் இருதயம் அவருக்கு முன்பாக உண்மையாயிருந்தால் சகல துர்க்குணம், பொல்லாப்புக்கு நாம் விலகி இருப்போம். **சங் 18:23-ல் அவர் முன்பாக நான் மன உண்மையாயிருந்து என் துர்க்குணத்துக்கு விலக்கிக் காத்துக் கொண்டேன்** என்கிறான்.

மோசேயைக் குறித்து கர்த்தர் சாட்சியாக அறிவிக்கிறார். **எண் 12:7-ல் என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்** என்றார். அவனோடு சொப்பணத்திலோ, தரிசனத்திலோ நான் பேசவில்லை, மறைபொருளாகவோ அவனோடு நான் பேசாமல் முகமுகமாக, பிரத்தியட்சமாக பேசுகிறேன். அவன் கர்த்தரின் (என்) சாயலைக் காண்கிறான் என்றார். உண்மையுள்ள மனுஷர்கள் தேவனுடைய சாயலைக் காண முடியும். சில வேளையில் நேரடியாகவும், 2 கொரி 4:4-ன்படி தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் மறைபொருளைப் பார்க்கவும் தேவன் அநுக்கிரகம் செய்கிறார். இன்றைக்கும் நாம் மோசேயைப் போல உண்மை யுள்ளவர்களாய் இருந்தால் இந்தச் சாயலை நாம் பார்க்க முடியும். **எபி 3:5-ல் மோசே பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான்** என்று வாசிக்கிறோம். உண்மையுள்ளவர்கள் அவருக்குப் பணிவிடை செய்வார்கள். இன்றைக்கு பணிவிடை செய்வது என்பதை பார்க்க முடியவில்லை. சொந்த குடும்பத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதோ, வேலை ஸ்தலத்தில் பணிவிடை புரிவதோ இல்லாமல் இருக்கிறது, குறைந்திருக்கிறது.

பவுல் **1 தீமோத் 1:12,13-ல் என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.** முன்னே தூஷித்தேன், தேவ ஜனத்தை துன்பப்படுத்தினேன், கொடுமை செய்தேன், அப்படியிருந்தும் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன் என்கிறார். **1 கொரி 7:25-ல் நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்கு கர்த்தரால் இரக்கம் பெற்றேன்** என்கிறார். நம் பெலத்தினால் முடியாது, நாம் உண்மை யுள்ளவர்களாய் இருக்க தேவ இரக்கம் நமக்கு வேண்டும். அந்த இரக்கத்தால் தான் நாம் எல்லாக் காரியத்திலும் உண்மையுள்ளவர்களாய் இருக்க முடியும். **1 தீமோத் 3:11-ல் அந்தபடியே ஸ்திரிகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்.** பெண்கள் எல்லாக் காரியத்திலேயும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று பவுல் எழுதுகிறார். தீமோத்தேயுக்கு எழுதும் போது 1 தீமோத் 4:12-ல் உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு,நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும் ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்றார். இவையெல்லாவற்றிலும் நாம் உண்மையாயிருக்க தேவ இரக்கம் நமக்கு வேண்டும்.

## வேலையில் உண்மை

மோசே ஒருவனாக ஜனங்களின் வழக்கை தீர்த்து, தேவ கட்டளைகளையும், பிரமாணங்களையும், தெரிவித்துக் கொண்டிருந்த போது, மோசேயின் மாமன் எத்திரோ அதை அறிந்து, நீரும்,ஜனங்களும் தொய்ந்து போவீர்கள். சில நேரத்தில் திருமண வீடுகளில், மண்டபத்தில் மணமக்களை வாழ்த்த வரும் போது நீண்ட வரிசையில் நிற்க நேரிடும் போது களைத்து விடுவோம். அதைப் போல எத்திரோ ஆலோசனை சொல்லி, நீரே ஜனங்களுக்குள் தேவனுக்கு பயந்தவர்களை,

உண்மையுள்ளவர்களை, பொருளாசையை வெறுப்பவர்களை, திறமையுள்ளவர்களை ஆயிரம் பேருக்கும், நூறு பேருக்கும்,பத்துப் பேருக்கும் அதிபதியாக ஏற்படுத்தும் என்று யாத் 18:21-ல் சொல்கிறார்.

அப்பொழுது உமக்கு நன்மையுண்டாகும் என்று சொன்ன ஆலோசனையைக் கேட்டு, கீழ்படிந்து ஆசீர்வதிக்கப்பட்டான். அப்படிப்பட்ட உண்மையுள்ளவர்கள் இருந்தார்கள். எதையும் கேட்டுச் செய்வது, சொன்னதைச் செய்வது, தானாக யோசித்து திறம்படச் செய்வது, திறந்த மனமாய் செயல்படுவது இவைகளெல்லாம் உள்ள உண்மையுள்ளவர்கள் மோசேக்கு இருந்தார்கள்.நாமும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று வெளி 17:14-ல் வாசிக்கிறோம். அவரோடே கூட இருக்கிறவர்கள், அழைக்கப்பட்டவர்களும், தெரிந்து கொள்ளப் பட்டவர்களும் உண்மையுள்ளவர் களுமாயிருக்கிறார்கள் என்று தூதன் சொல்லுகிறதைப் பார்க்கிறோம்.

தாவீதைப்பற்றி 1 சாமு 22:14-ல் அகிமெலேக் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக உம்முடைய எல்லா ஊழியக்காரரிலும் தாவீதைப் போல ராஜாவுக்கு மருமகனும், உம்முடைய கட்டளைகளின்படி செய்து வருகிறவனும், உம்முடைய வீட்டிலே கனமுள்ளவனுமாயிருக்கிற உண்மையுள்ளவன் யார்? ராஜா அவசரமாக தாவீதை ஏதோ அலுவலாக அனுப்பியுள்ளதாக நினைத்தேன் என்று தாவீதைப் போல உமது வீட்டிலே உண்மையுள்ளவன் உமது கட்டளைகளின்படி செய்கிறவன் யார்? என்று ஒரு ஆசாரியன் தாவீதை பற்றிச் சொல்கிறான். அந்த அளவு தாவீது சவுலின் அரண்மனையில் சவுலின் கட்டளைகளின்படி செய்து உண்மை யுள்ளவனாயிருந்தான்.

நெகேமியா அலங்கத்தைக் கட்டி முடித்த பிறகு,நெகே 7:2-ல் நான் என் சகோதரனாகி அனானியையும், அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவனும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரண்மனைத் தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினேன் என்கிறான். உண்மையுள்ளவர்கள், தேவனுக்குப் பயந்தவர்களை நெகேமியா ஏற்படுத்தினதைப் பார்க்கிறோம். நெகே 13:13-ல் இன்னும் சிலரை ஏற்படுத்தி பொக்கிஷ அறைகளின் மேல் விசாரிப்புக்காரராக வைத்தேன். அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப் பட்டார்கள்.ஆகையால் தங்கள் சகோதரர் களுக்குப் பங்கிடுகிற வேலை அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது. உண்மையுள்ளவர்கள் கையில் சில பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகிறது. நாம் தேவனுடைய பார்வையில் உண்மை யுள்ளவர்களாய் இருந்தால் நம்மையும் நம்பி தேவன் பொறுப்புகளைத் தருவார். இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஒரு அநீதியான உக்கிராணக்காரன் உண்மையாய் இல்லாமல் ஆஸ்தியை அழித்தவனைப் பற்றிய உவமையைச் சொன்னார். லூக் 16:1-12 வரை வாசிக்கிறோம். கொஞ்சத்தில் உண்மை யுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாய் இருக்கிறான். அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாய் இராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள். வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர் களாயிராவிட்டால், உங்களுக்கு யாதென்றைக் கொடுப்பவர் யார்? என்று சொன்னார். இந்த உலக வேலையில், உலகப் பொருளில், உலகக் காரியத்தில், நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்ட கொஞ்ச விஷயத்தில் நாம் உண்மை யாயிருந்தால் அநேக மேன்மைகளை நாம் பெற முடியும். அதற்குத்தான் ஆண்டவர் என் உண்மை உன்னோடிருக்கும் என்று சொல்கிறார். இவையெல்லாவற்றையும் செயல்படுத்த உமது உண்மையை எனக்குத் தாரும் என்று ஜெபித்து செயல்படுவோம். நம் ஆண்டவராகிய இயேசு தாமே தம்முடைய உண்மையையும், தம்முடைய கிருபையையும் நமக்கு தந்து நம்மை ஆசீர்வதிப்பாராக!

வாலிபர் பகுதி

# எழும்பிப் பிரகாசிக்க என்ன செய்ய வேண்டும்?



சகோதரி. பிரேமா டேவிட்

**எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும், ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார், அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.. ஏசாயா 60:1,2**

நம்மை பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசுவாகிய ஒளி ஏற்றப்பட்ட உங்கள் வாழ்க்கையில், உங்கள் குடும்பத்தில், வேலை பார்க்கும், படிக்கும் இடத்தில், உங்கள் ஊரில் நீங்கள் பிரகாசிக்க வேண்டும் என்பதே உங்களைக் குறித்த தேவனது சித்தமும், விருப்பமுமாகும். நான் குறைவுள்ளவன்(ள்), நான் பிரயோஜனமில்லாதவன்(ள்) என்னால் முடியாது என்று சொல்லிக் கொண்டு மங்கி எரிந்து கொண்டிருக்கிற, மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிற உங்களைச் சீர்படுத்தி, உங்களைப் பிரகாசிக்க வைக்க வேண்டும் என்றே இந்த இதழ் வாயிலாக உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார். எழும்பிப் பிரகாசிப்பதற்கான உன் வேளை வந்துவிட்டது என்று சொன்ன ஆண்டவர், எழும்பிப் பிரகாசிக்க என்ன செய்ய வேண்டும்? என்று கடந்த மாதத்தில் முதலாவதாக இனிப்பாவஞ் செய்யாதே, என்னைப் பின்பற்று என்று சொன்னதைப் பார்த்தோம், படித்தோம். அதாவது பாவஞ்செய்து, இருளாயிருந்த உன் வாழ்க்கையில் இயேசுவாகிய ஒளி வேண்டும் என்றும், அவரை ஏற்றுக்கொண்ட நீ, விட்டுவந்த அந்தப் பாவத்தை இனி திரும்ப செய்யக்கூடாது, (இயேசுவாகிய) என்னை, சிலுவையை பின்பற்ற வேண்டும் என்று கட்டளையாகச் சொல்லியிருக்கிறார். அவரை பின்பற்ற தொடங்கிவிட்டாலே போதும் பழைய பாவத்தின் திசைக்கு நம் சிந்தனை போகவே போகாது. நான் எழும்பிப் பிரகாசிக்க விரும்புகிறேன். பழைய பாவத்தைச் செய்யாமல் இயேசுவை பின்பற்றும் போது சில சமயம் தடுமாறுகிறேனே, உறுதியாய் நிற்க முடியவில்லையே என ஏங்குகிறீர்களா? தொடர்ந்து முன்னேறப் படியுங்கள், எழும்பிப் பிரகாசிக்க என்ன செய்ய வேண்டும்? எனப் பார்ப்போம். இனி நீங்கள் இயேசுவுக்காக நிச்சயமாக எரிந்து பிரகாசிப்பீர்கள்.

## அணைத்து விடாதே, அனல் மூட்டி எரியவிடு

**உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள். 2 தீமோத் 1:14, நான் உன்மேல் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன் 2 தீமோத் 1:6.**

பாவம் நம் நிம்மதியை கெடுத்து நரகத்திற்குத் தள்ளும். தேவனை விட்டுப் பிரிக்கும் என்று யாரோ சொல்லி, ஆலயத்தில், ஜெபக்கூட்டத்தில், உங்கள் உள்ளத்தில் இயேசப்பா, என் பாவத்தை மன்னியுங்க, என் உள்ளத்திலே ஒளியாய் வாங்க என்று நீங்கள் இடம் கொடுத்ததால, நீங்க என் பாவத்திற்காக மரித்து உயிரோடு எழுந்த தெய்வம் என்று உங்க உள்ளத்தில் நம்பி, வாயினாலே நீங்க சொன்னதால, ஒளியாகிய இயேசப்பா உங்கள் உள்ளத்தில் வந்துவிட்டார். பாவ மன்னிப்பு கிடைச்சுருச்சு என்ற நிச்சயமும் உங்களுக்கு வந்துருச்சு. இதற்குப் பெயர் தான் இரட்சிப்பு. இயேசுவாகிய ஒளியை, அவர் கொடுத்த இரட்சிப்பாகிய நற்பொருளை அணைத்து விடாமல் காத்துக் கொள்ள வேண்டும். இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை தேவ வரமாகக் கொடுக்கிறார். இயேசுவை ஏற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது, பரிசுத்த ஆவியானவரையும் பெற்று,

அவரின் துணையோடு தான் நீங்களும், நானும் எழும்பிப் பிரகாசிக்க முடியும்.

நம்முடைய சொந்த பெலத்தினால் பாவத்தையும், சாத்தானையும், இச்சைகளையும், மனிதரின் சூழ்ச்சிகளையும் மேற்க்கொள்ள முடியாது. ஆனால் ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும் போது சத்துரு வெள்ளம் போல வரும்போது அவர், அவனுடைய தந்திரங்களை, சூழ்ச்சிகளை முறியடித்து நமக்கு ஜெயம் கொடுப்பார். இயேசு தான் தேவனுடைய குமாரன். அவராலேயன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை என்று அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரையும் பாவத்தில் விழாமல், அதை மேற்கொள்ளுவதற்கும், பரிசுத்தமான வாழ்க்கையில் பிரகாசிக்க வைப்பதற்காகவும் தான் நமக்கு பரிசுத்த ஆவியானவரைத் தேவன் தருகிறார்.

இயேசு உயிர்த்தெழுந்து பரத்திற்கு ஏறிப்போகும் போது, தம்முடைய சீஷர்களிடம் பரிசுத்த ஆவியைப் பெற காத்திருக்கச் சொன்னார். அப்படியே அவர்கள் காத்திருந்த போது பரிசுத்த ஆவியைப் பெற்று பெலனடைந்து, உலகம் முழுவதும் சென்று இயேசுவுக்காக எழும்பிப் பிரகாசித்தார்கள். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இயேசுவாகிய ஒளி இந்த உலகில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் இன்னும் அநேகர் இருளில், காரிருளில் இருக்கிறார்கள். அவர்களும் ஒளியைப் பெற வேண்டும். அதற்காகத்தான் நீங்கள் எழும்பிப் பிரகாசிக்க, ஒளியைப் பெற்றிட வேண்டும் என்று விரும்புகிறார்.கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல. ரோமர் 8:9. எனவே நீங்கள் கிறிஸ்துவின் பிள்ளையாக வாழவும், வளரவும், சிறந்து விளங்கவும் எழும்பிப் பிரகாசிக்க வேண்டும். நாம் எழும்பிப் பிரகாசிக்க வேண்டும் என்றால் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?, மிக எளிதான காரியம். கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான். மத் 7:7-11, லூக் 11:9-13. தாழ்மையோடும், தாகத்தோடும், உரிமையோடும் கேட்கும் போது பரிசுத்த ஆவியானவரால் நீங்கள் நிரப்பப்படுவீர்கள். தம்மை விசுவாசிக் கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார்.

அப்படி பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை தொடுவதை நீங்கள் உணரும் போது மேலான சந்தோஷமும், சமாதானமும், நம்பிக்கையும் உங்களை நிரப்பும். அவருடைய தொடுதலால் உங்கள் நோய்கள், தீமைகள் விலகும். அது மாத்திரமல்ல, அவர் உங்கள் நாவைத் தொடும் போது தெய்வீக பாஷை, பரலோக பாஷையை பேசத் தொடங்குவீர்கள்.
இது யாரும் கற்றுக் கொடுக்க முடியாது. ஆவியானவரே உங்களுக்குள் இருந்து பேசுவார், வேண்டுதல் செய்வார். எதைச் செய்ய வேண்டும்,எதைச் செய்யக் கூடாது, எப்படி, என்ன சொல்லி ஜெபிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பார். தேற்றரவாளனாய் இருந்து சகல சத்தியத்திலும் நடத்துவார்.

மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு ஏற்ற, மணவாட்டியாய் உங்களை மாற்றுவதற்காக உங்களுக்கு உதவி செய்கிற, உற்சாகப்படுத்துகிறவராய் உங்களோடு எப்பவும் கூடவே இருப்பார்.ஏதாவது ஒரு நேரம் தேவனுக்குப் பிடிக்காததை நீங்கள் செய்தால் துக்கப்படுவார். அது அவரை அசட்டை பண்ணுவதற்கு சமம். அதே மாதிரிதேவனோடு உறவாடுகிற ஜெபத்தை நீங்கள் செய்யாமல், தேவனுடைய வார்த்தையைப் படிக்காமல், கவனித்து நடக்காமல் அசதியாக, நீங்கள் இருந்து விட்டால். அதுதான் ஆவியானவரை அவித்துப் போடுவதாகும். அடுப்பே பற்றவைக்காமல் இருந்தால் பூனை அதிலே படுத்துக் கொள்ளும் தானே, அனலாய் இருந்தால் பூனையும் வராது, எந்த பூச்சியும் வராது. அதுபோல பெற்ற இரட்சிப்பை ஆவியானவரை இழந்து போகாமல் இருக்க, ஜெபத்திற்கு, வேத வாசிப்பிற்கு உங்கள் நேரத்தைக் கொடுக்கும் போது நீங்கள் அணைந்து விடாமல் உங்களை அனல் மூட்டுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் இயேசுவுக்காக எழும்பிப் பிரகாசிக்க முடியும், எரிந்து பிரகாசித்து மற்றவர்களையும் வெளிச்சத்திற்குள் கொண்டு வர முடியும். எனவே தினமும் குறைந்தது அரை மணி நேரம், ஒரு மணி நேரம் கர்த்தரைப் பாடி, வேதத்தை வாசித்து ஜெபியுங்கள். ஆவியானவரின் பாஷையிலே ஜெபியுங்கள். எந்த சாத்தானும், மனித சூழ்ச்சிகளும் உங்களுடைய வளர்ச்சியை, பிரகாசத்தை அணைக்கவே முடியாது. நீங்கள் கர்த்தருக்காக பிரகாசிக்க கர்த்தர் தாமே உங்களை ஆவியானவரால் அனல்மூட்டி எழுப்புவாராக.



# சில்லறையால் நீங்கினது சில்லறைத்தனம், சில்லறைப்புத்தி

சுசிலா அம்மா, அப்பா சொல்கேட்டு நன்றாக வேலை செய்வாள். செய்யச் சொன்ன வேலையை எல்லாம் முடிச்சவுடனே நான் வேலை செஞ்சதற்கு காசுதாங்க எனக் கேட்டாள். அம்மாவும், அப்பாவும் சரி, சின்னப்பிள்ளை கேட்கிறாள், அப்பத்தான் அவளுக்கு சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் இருக்கும்என்று அவள் கேட்டபடியே சில்லறை காசுகளைக் கொடுத்து வந்தார்கள்.. அவர்கள் எப்போதாவது கொடுக்க மறந்துவிட்டால் போதும் அவர்களைக் கேட்காமலே காசை எடுத்து வைத்துக்கொள்வாள். இப்படி அவர்கள் கொடுத்த, அவளாக எடுத்த காசையெல்லாம் தின்பண்டம் வாங்கிச்சாப்பிட்டு, மீதியைச் சேர்த்து வைத்தாள். அம்மாவுக்கும், அப்பாவுக்கும் ரொம்ப சந்தோஷம். நம்ம பிள்ளை கடைக்குப் போய் சாமான் வாங்கி வருகிறாள், சிறுசேமிப்பு செய்கிறாள் என்று. ஒருநாள் சுசிலா தான் சேர்த்து வைத்த காசை எண்ணிப் பார்த்தாள் 200 ரூபாய்க்கு 50 ரூபாய் குறைவாக இருந்தது. இதை எப்படியாவது இந்த இரண்டு நாளில் 200 ரூபாயாக சேர்த்து விடவேண்டும். அப்பத்தான் அந்த பணத்தையெல்லாம் எடுத்துட்டுப் பொருட்காட்சிக்கு போய் நல்லா ராட்டினம் சுத்தலாம், டெல்லி அப்பளம் சாப்பிடலாம், ஜாலியாக இருக்கலாம்னு நினைத்தாள். அம்மா கவனிக்காம இருந்தபோது அவங்க பர்ஸிலிருந்தும், அப்பா கவனிக்காம இருந்தபோது அப்பாவுடைய பாக்கெட்டிலிருந்தும் சில்லறைக் காசுகளை எடுத்தாள். நினைத்தபடியே 200 ரூபாய் சேர்ந்தது பொருட்காட்சிக்குப் போனாள். ராட்டினத்தைச் சுத்திட்டு, ஊஞ்சல ஆடிட்டு, டெல்லி அப்பளம் சாப்பிட வந்தாள் சுசிலா. அண்ணே ஒரு அப்பளம் என்று சொல்லிக்கிட்டு 50 ரூபாய் நீட்டினாள். டெல்லி அப்பளத்தை வாங்கினவள் ஆசை ஆசையாய் சாப்பிட்டாள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதுதான் சில்லறை வாங்கவில்லை என ஞாபகம்வந்தது. ஓடிச்சென்று அண்ணே சில்லறை தரலியே எனக்கேட்டாள். அப்பளம் தரும்போதே மீதிக் காசும் தந்துட்டேன் என்றார் கடைக்காரர். சுசிலாவோ நான் வாங்கவேயில்லை எனச் சொல்லிப் பார்த்தாள். அவரோ, அவளைக் கவனிக்கவேயில்லை. உடனே சுசிலாவுக்கு மனசில அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தெரியாம சில்லறைக் காசை எடுத்தோமே இப்ப இந்த அண்ணாட்ட நம்ம காசு மாட்டிகிருச்சே என்று வேதனைப்பட்டு, இயேசப்பா என்னை மன்னிச்சிருங்க, நான் இனிமே அம்மா, அப்பாவுக்கு தெரியாம காசை எடுக்கமாட்டேன், சில்லறைத்தனமா நான் நடக்கமாட்டேன் என சொல்லிட்டு இருக்கும்போதே அந்தக் கடைக்காரர் அப்பளத்தை வாங்கினவுடனே சாப்பிட ஓடக்கூடாது மீதக் காசை வாங்கிட்டுத்தான் சாப்பிடபோகனும் என்ன பாப்பா, சரியான்னு சொல்லி மீதக்காசைக் கொடுத்தார். சுசிலாவும் நன்றி இயேசப்பான்னு மனசுக்குள்ளே சொல்லிட்டு, கடைக்காரருக்கு நன்றி அண்ணன்னு சொன்னாள். வீட்டுக்குப் போனவுடன் அம்மா, அப்பாகிட்ட நடந்ததைச் சொல்லிட்டு இனிமே உங்களைக் கேட்காம காசு எடுக்கமாட்டேன்னு மன்னிப்புக் கேட்டாள். அம்மா, அப்பா அவளை அணைத்துக் கொண்டு சந்தோஷப்பட்டனர்.

**ஜெபம்**

அன்புள்ள இயேசப்பா அம்மா, அப்பாவுக்கு தெரியாமலும், கேட்காமலும், பிறருடைய பொருளை, காசை நான் திருடி வைத்துக் கொண்டதை மன்னியுங்க. இயேசப்பா இனிமே சில்லறைத்தனமாக நான் நடக்காமலிருக்க என்னைக் காத்துக் கொள்ளுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

**மனப்பாட வசனம்** திருடுகிறவன் இனித் திருடாமல் இருக்கக்கடவன். எபே 4:28

சாட்சி பகுதி



# பரிகாரியாகிய கர்த்தர் செய்த நன்மைகளில் சில...

**சகோதரி. பிரியா குணசீலன் - திருப்பூர்**

கடந்த வருடம் செம்பட்டி வானத்தின் வாசலில் நடைபெற்ற உபவாச ஜெபத்திற்கு நானும், என் கணவரும் வந்திருந்தோம். என் கணவர் மிகவும் பெலவீனப்பட்டு நடக்க முடியாத நிலையிலும், எதுவும் சாப்பிட முடியாமலும், சாப்பிட்டால் வாந்தி எடுத்து விடுவார். மருத்துவர்கள் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொன்ன நிலையில், கர்த்தர் தான் சுகம் தர வேண்டும் என்ற நம்பிக்கையோடு வானத்தின் வாசல் உபவாச ஜெபத்திற்கு வந்தோம். நாங்கள் கேட் அருகில் உள்ளே வரும்போதே சகோதரர் அவர்கள் மூலமாக தேவன் எங்களோடு பேசினார். உனக்கு அயுசு நாட்களைக் கூட்டித் தருவேன் என்று, அந்த வார்த்தை என் கணவர் உள்ளத்திற்குள் சென்ற உடனே தேவனுடைய வார்த்தை அவருக்கு புதிய ஜீவனைத் தந்தது. அன்று வானத்தின் வாசலில் தந்த உணவை சாப்பிட்டார். அன்றிலிருந்து வாந்தி வருகிறது நின்றுபோயிட்டு. தற்போது நல்ல சுகத்தோடும், பெலத்தோடும் இருக்கிறார். என் கணவருக்கு சுகம் தந்த தேவாதி தேவனுக்கு நன்றி.

**சகோதரி. ஜோதி - மதுரை**

நான் இயேசு வாழ்கிறார் ஊழியங்களுக்காக தினமும் 5 நிமிடம் குழுவினருடன் இணைந்து ஜெபிப்பேன். இதன் பலனாக ஆபத்துக்கு விலக்கி தேவன் என் மகளைக் காப்பாற்றினார். கடந்த வாரத்தில் என் மகள் ஆட்டோவில் ஏறப்போகும்போது, பின்னாக பஸ் வருகிறதைப் பார்த்து ஆட்டோவில் ஏறாமல் பஸ்ஸில் ஏறிவிட்டார். பஸ்-க்கு முன்பாக ஆட்டோ போய்விட்டது. கொஞ்சதூரம் போனதும் அந்த ஆட்டோ விபத்திற்குள்ளாகி விட்டது. அதில் இருந்த அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. தேவன் இந்த ஆபத்திலிருந்து என் மகளை காப்பாற்றினார். தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி. அமுதா - கடலூர்**

கடந்த மாதத்தில் என் தம்பி விபத்துக்குள்ளாகி உயிர்பிழைக்க முடியாது என்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். மருத்துவர்களும் பரிசோதனை செய்துவிட்டு எங்களால் ஒன்றும் முடியாது கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். உடனே நான் தங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் தம்பிக்கு தேவன் ஜீவனைத்தரவும், சுகத்தைத் தரவும் ஜெபிக்க கேட்டேன். தேவன் கண்ணீரின் ஜெபத்திற்குப் பதில் தந்தார். என் தம்பிக்கு புதிய ஜீவனைத்தந்து, புதிய வாழ்வை தந்து மருத்துவர்களை ஆச்சரியப்பட வைத்திருக்கிறார், அவருக்கே கோடான கோடி நன்றி. ஜெபித்த உங்களுக்கும் நன்றி.



## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

### 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

### 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

### 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

### 5) மணியார்டர்(E.M.O) : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

நடப்புச் செய்தி

# வரலாறு காணாத வெப்பம்! தகிக்கும் சூரியன்.... சம்மர் வரவே இல்லை அதுக்குள் இப்படியா!

இதுவரை பதிவு செய்யப்பட்ட ஆண்டுகளிலேயே இந்த 2024 ஜனவரி மாதம் முதலில் இருந்தே மிகவும் வெப்பமானதாக இருந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். புவி வெப்ப மயமாதல் என்பது உலக நாடுகளுக்கு மிகப்பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. இதனால் உலகில் பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்படுகிறது. இது பருவ நிலை மாற்றத்தையும் ஏற்படுத்துகிறது.

**காலநிலைமாற்றம்** : இதற்கிடையே கடந்த ஜனவரி மாதம் என்பது இதுவரை இல்லாத அளவுக்கு வெப்பமான ஜனவரியாக அமைந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் சி35 அதாவது கோப்பர்நிக்கஸ் காலநிலை மாற்றச் சேவை என்ற அமைப்பு அறிவித்துள்ளது. காலநிலை மாற்றத்தால் ஒருபக்கம் அதீத மழை கொட்டி தீர்க்கிறது. மற்றொரு பக்கம் மிகக் கடுமையான வெப்பம் பொளந்து தள்ளுகிறது. உலக வெப்ப மயமாதல் எந்தளவுக்குத் தீவிர பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதையே இதுகாட்டுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இதற்கு முன்பு வரை ஜனவரி 2020 தான் அதீத வெப்பமான ஆண்டாக இருந்தது. ஆனால், இப்போது காலநிலை மாற்றம் & எல் நினோ நிகழ்வுகளால் வெப்பம் அதிகரித்து வருகிறது. புவி வெப்ப மயமாதல் நிகழ்வு கடந்த சில ஆண்டுகளில் மோசமானதாக மாறியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கடந்த 1850 முதல் பார்க்கும்போது 2023 தான் வெப்பமான ஆண்டாக இருந்துள்ளது. ஆனால், இந்தாண்டு ஜனவரி மாதமே மிகவும் வெப்பமான ஆண்டாக மாறிவிட்டது. கிழக்கு பசிபிக் பெருங்கடலில் ஏற்படும்எல் நினோவின் தாக்கம், கடந்தாண்டு முதல் அதிகரித்த வெப்பம் ஆகியவை ஜனவரியிலும் வெப்பம் அதிகமாக இருக்கக் காரணமாக இருந்துள்ளது. மேலும், தொழில்துறைக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும்போது 1.5 செல்சியஸுக்கு அதிகமான வெப்பம் பதிவாகியுள்ளது. இப்படியே தொடர்ந்து 12 மாதங்கள் அதீத வெப்பம் பதிவாகி இருக்கிறது. க்ரீன் ஹவுஸ் வாயுவைக் குறைப்பது மட்டுமே புவி வெப்ப மயமாதலைத் தடுக்கும் ஒரே வழி என்று அவர் தெரிவித்தார்.

**எச்சரிக்கை** : 1850 முதல் 1900 வரையிலான காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இந்த ஜனவரி மாதம் பதிவான வெப்பம் என்பது 1.66 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருந்துள்ளது. கடந்தாண்டு பதிவான வெப்பமே மிகவும் அதிகமாக இருந்ததாக மக்கள் புலம்பி வந்த நிலையில், இந்தாண்டு அதை விட அதீத வெப்பம் பதிவாக வாய்ப்புகள் அதிகம் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். மேலும், இதுவரை பதிவான வெப்பமான ஆண்டுகளில் டாப் 5-ல் 2024 வரவும் 99% வாய்ப்புள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர். எல் நினோ நிகழ்வால் வெப்பம் அதிகரிப்பது பொதுவாக நடக்கும் நிகழ்வுதான். இந்த எல் நினோ கடந்த மாதம் பலவீனமடைந்த போதிலும், ஜனவரி மாதம் வெப்பம் அதிகரித்துள்ளது.. இதற்கான காரணம் புரியாமல் ஆய்வாளர்கள் குழம்பிபோய் இருக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை எப்போதும் ஏப்ரல் மாதம் தான் வெப்பம் அதிகரிக்க ஆரம்பிக்கும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பிப்ரவரி இறுதி அல்லது மார்ச் மாதமே வெப்பம் அதிகரிக்கத் தொடங்கி விடுகிறது. இது பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் ஆபத்துகளை உணர்த்துவதாக இருக்கிறது. இந்தாண்டு பிப்ரவரி மாதமே ஈரோட்டில் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி வெப்பம் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai


நம்பிக்கையின் இரவு
NIGHT OF HOPE
LIVE – நேரலை நிகழ்ச்சி
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
தேவ செய்தியாளர்கள்
சகோதரர். L. வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது
மார்ச் 31
ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் - 94428 00449


ONE SOUL AT A TIME
ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா
1 மணித்துளி
ஆத்துமா
ரூபாய்
இந்த உன்னதமான சுவிசேஷ ஊழிய திட்டத்தில் எங்களோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவச்செய்யுங்கள்!
ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா என்றால் ஒரு மாதத்திற்கு 744 மணிநேரம்
மாதந்தோறும் உங்களால் முடிந்த ஆத்துமாக்களை இந்த கடைசிக்கால சுவிசேஷ பணியில் தாங்க முன்வாருங்கள்.
இணையதளம் மூலமாக தாங்கிட
GPay
944 300 9 333

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2024-2026
WPP Registration No. TN/WPP-40/SR/2024-2026
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.